In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

S.C.No.11/2021 | Prosecution witness P.W.7
Name: Vijayalakshmi | Calling:
Father Name: | Religion:
Village: | Caste:
Taluk: | Age:

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 28.08.2023

**(Accused is present. )**

முதல் விசாரணை :-

நான் தற்போது முத்துலாபுரத்தில் வசிக்கிறேன். கூலி வேலை செய்கிறேன். அசா1 முதல் 6 ஆகியோர்களை தெரியும். என் ஊரைச் சேர்ந்தவர்கள். ஆஜர் எதிரியை தெரியும். அவரும் என் ஊரைச் சேர்ந்தவர். 17.05.2020 ம் தேதி மதியம் சுமார் 2.45 மணியளவில் நான், தமிழ்ரசி, பூபதி ஆகியோர்கள் தோட்டத்தில் கூலி வேலையை முடித்துவிட்டு வந்துகொண்டிருந்தபோது சங்கிலி வீட்டிற்கு முன்பு கிருஷ்ணமூர்த்தி, அழகர்சாமி, ராமர், கற்பகம், அலெக்ஸ் ஆகியோர்கள் சத்தம் போட்டுக் கொண்டிருந்தார்கள். எதிரி சங்கிலி கிருஷ்ணமூர்த்தியின் அம்மாவை தப்பாக பேசிக்கொண்டிருந்தான். உடனே சங்கிலி உன்னை கொல்லாமல் விட மாட்டேன் என சொல்லி வீட்டிற்குள் இருந்து கத்தியை எடுத்து வந்து கிருஷ்ணமூர்த்தியின் இடது மார்பில் இரண்டு இடத்தில் கத்தியால் குத்தினான். கிருஷ்ணமூர்த்தி மயங்கி கீழே விழுந்துவிட்டார். இரத்தம் பயங்கரமாக வெளியேறியது. நாங்கள் எல்லாம் சத்தம் போட்டோம். பின்னர் அலெக்சும் வினோத்தும் கிருஷ்ணமூர்த்தியை பைக்கில் வத்தலக்குண்டு அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். அங்கு மருத்துவர் பரிசோதனை செய்துவிட்டு கிருஷ்ணமூர்த்தி இறந்துவிட்டதாக சொன்னார். மறுநாள் 18.5.2020 ம் தேதி என்னை அறுவைகொட்டறையில் வைத்து போலீசார்

விசாரித்தார்கள். அப்போது சம்பவம் நடந்தது உண்மை என்றும் அதை நான் பார்த்ததாகவும் சொன்னேன்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2023.08.28 17:55:33 +0530

Principal District Judge,
Dindigul.